**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி**

முன்னிலை: **திரு.ஜெ.தமிழ்முருகன்,** பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2. மன்னார்குடி .(மு.கூ.பொ)

2026-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 13-ம் நாள்.

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.280/2025**

## CASE SUMMARY

<table>
<tr><th>Sl.No.</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1.</td><td>The period of remand of the accused</td><td colspan="3">Remanded - 03.10.2024<br>Released on : 08.10.2024</td></tr>
<tr><td>2.</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="3">29.04.2025</td></tr>
<tr><td>3.</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">Not Applicable</td></tr>
<tr><td>4.</td><td>The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="3">08.07.2026</td></tr>
<tr><td>5.</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .</td><td colspan="3">U/S 359 BNSS Petition filed on 22.07.2026 and Dismissed .</td></tr>
<tr><td rowspan="3">6.</td><td rowspan="3">Date of examination in Chief and Cross examination of a witness</td><td></td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>22.07.2026</td><td>22.07.2026</td></tr>
<tr><td>PW2</td><td>22.07.2026</td><td>22.07.2026</td></tr>
<tr><td></td><td></td><td>PW3</td><td>24.07.2026</td><td>24.07.2026</td></tr>
<tr><td>7.</td><td>Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court</td><td colspan="3">28.07.2026</td></tr>
<tr><td>8.</td><td>Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be</td><td colspan="3">Not Applicable</td></tr>
<tr><td>9.</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td colspan="3">Not Applicable</td></tr>
</table>

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:02:59 +0530

**//எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>காவல் ஆய்வாளர்,<br>கோட்டூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.205/2024<br>ச/பி. 296(b),118(1)351(3) of BNS | | ..............குற்றமுறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பிரவீன்@ ஜெகன், வயது 26/26<br>த/பெ. ஜெகதீசன்,<br>தெற்கு தெரு, ஆதிச்சப்புரம்<br>மன்னார்குடி தாலுக்கா | | ..................…எதிரி |

இவ்வழக்கானது கடந்த 02.08.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 28.07.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை திரு. S. ஆனந்த், B.A., B.L., அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.தமிழ்வாணன்,B.A.,B.L., அவர்களும், முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (29.07.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்......

**//தீர்ப்புரை//**

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

சாட்சி 1னின் மகள் கோபிகா அவரது கணவரான எதிரியுடன் சண்டை போட்டுக்கொண்டு, சாட்சி 1னின் வீட்டிற்கு வந்து இருந்ததாகவும், இந்நிலையில் கடந்த 27.09.2024-ம் தேதி சாட்சி 1 ஆனவர், சாட்சி 2 ஆன திவாகர் என்பவருடன் கோவில் திருவிழா சம்மந்தமாக பணம் தரமுடியவில்லை, நீ கொடுத்து விடு என்று பேசிக்கொண்டிருந்த போது, எதிரியானவர் நீ என்னடா தேவடியா பயலே, பெரிய ஆளு மயிரா, குச்சிக்காரி மவனே என்று பேசியபடி வந்ததாகவும், சாட்சி 1 வீட்டு வாசலில்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:07 +0530

நின்றபோது எதிரியானவர் கையில் அருவாள்மனையுடன் ஓடி வந்து சாட்சி 1னின் தலையில் வலது பக்கம் வெட்டியதாகவும், சாட்சி-1தடுத்தபோது இடது கையில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், சத்தம் கேட்டு அருகில் நின்றுக்கொண்டிருந்தவர்கள் ஓடி வந்து எதிரியின் கையில் வைத்திருந்த அருவாமனையை, பிடுங்க சென்றபோது எதிரியானவர் கையில் வைத்திருந்த அருவாள்மனையை காட்டி இன்னைக்கி நீ தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த செய்கையானது ச/பி. 296(b),118(1)351(3) of BNS ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கோட்டூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு 230 BNSS-பிரிவின் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரியிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது ச/பி. 296(b),118(1),351(3) of BNS பிரிவின் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அசாஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.அரசுத்தரப்புசாட்சியங்களிலிருந்துபுலனப்படும்அரசுத்தரப்புவழக்கின்சுருக்கம்**

**அ.சா.1 சுதாகர் தனது சாட்சியத்தில்** "கடந்த 2024ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், ஒருநாள் இரவு சுமார் 09.00 மணியளவில் மின்வெட்டு காரணமாக தனது வீட்டு வாசலில் திவாகர் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தேன் என்றும், அப்போது ஒரு இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு எரியாமல், அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத ஒரு நபர் வேகமாக வந்து தன் மீது மோதிவிட்டார் என்றும், அதில் தனக்கு தலையின் வலது பக்கம் மற்றும் இடது கையில் வெட்டுக்காயம் போல் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றும், பின்னர்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:13 +0530

அருகிலிருந்த திவாகர் தன்னை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார் என்றும், தான் சிகிச்சையிலிருந்த போது போலிசார் தன்னிடம் விசாரித்தார்கள் என்றும், தான் வாய்மொழியாக சொன்னேன் என்றும், தன்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றும், தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் அ.சா.ஆ.1 வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்" என்று கூறி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா. 2 திவாகர் தனது சாட்சியத்தில்** அ.சா.1 சுதாகர் மற்றும் ஆஜர் எதிரி ஆகியோர்களை தெரியும் என்றும், வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும், கேள்விபடவும் இல்லை என்று பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர், திரு. செல்வநாயகம்** ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக தனது சாட்சியத்தில் "கடந்த 27.09.2024ம் தேதியன்று கோட்டூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரான திருமதி. ஸ்ரீநிதி என்பவர் பணியிலிருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவ மனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பக்கிரிசாமி மகன் சுதாகர் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.3 வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய மனு எண்.373/2024 ஆக மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு விசாரணைக்கு பின் கடந்த 01.10.2024-ம் தேதியன்று காவல் நிலைய குற்ற எண்.205/2024 ல் BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3)ன் கீழ் எதிரியின் மீது அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா மற்றும் சிவானந்தம் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் தயார் செய்து, அதில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:19 +0530

செய்துள்ளார் என்றும், காயம் அடைந்த சுதாகர் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும், உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்த, மன்னார்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சபரிநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.7 விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மருத்துவரின் கருத்துரையின் அடிப்படையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என சான்று வழங்கியுள்ளார் என்றும், சம்பவம் உண்மை என்று தெரியவந்ததும் எதிரியை தேடி வந்த நிலையில், ஆதிச்சபுரம் கடைதெருவில் நின்றுக் கொண்டிருந்தவரை, கடந்த 03.10.2024 ம் தேதியன்று 11.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், இத்துடன் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 29.04.2025-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5. எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

7. அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

8. எதிரி தரப்பு வழக்கறிஞர், எதிரி மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:25 +0530

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரி மீது BNS பிரிவுகள் 296(பி), 118(1), 351(3)ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அ.சா.1 ன் சாட்சியம் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 3 முதல் 9 வரையிலானவர்கள் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 9 காவல் உதவி ஆய்வாளர் திருமதி ஸ்ரீநிதி அரசுத்தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டு அவருக்கு பதிலாக காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வநாயகம் என்பவரை கூடுதல் சாட்சியாக சேர்த்து விசாரிக்க கோரியதன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டு அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டும் அசாஆ. 3 முதல் அசாஆ. 7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயம்பட்டவர் அ.சா. 1 ஆகவும், வழக்கினை கண்ணுற்ற சாட்சி அ.சா.2 ஆகவும் புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

**10. குற்றச்சாட்டுகளுக்கான தீர்வு**

i) சாட்சி 1னின் மகள் கோபிகா அவரது கணவரான எதிரியுடன் சண்டை போட்டுக்கொண்டு சாட்சி 1னின் வீட்டிற்கு வந்து இருந்ததாகவும், இந்நிலையில் கடந்த 27.09.2024-ம் தேதி சாட்சி 1 ஆனவர் சாட்சி 2 ஆன திவாகர் என்பவருடன் கோவில் திருவிழா சம்மந்தமாக பணம் தரமுடியவில்லை, நீ கொடுத்து விடு என்று பேசிக்கொண்டிருந்த போது, பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரியானவர் நீ என்னடா தேவடியாக பயலே, பெரிய ஆளு மயிரா, குச்சிக்காரி மவனே என்று பேசியபடி வந்ததாகவும், சாட்சி 1 வீட்டு வாசலில் நின்றபோது எதிரியானவர் கையில் அருவாள்மனையுடன் ஓடி வந்து சாட்சி 1னின் தலையில் வலது பக்கம் வெட்டியதாகவும், சாட்சி-1 தடுத்தபோது இடது கையில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் சத்தம் கேட்டு அருகில் நின்றுக்கொண்டிருந்தவர்கள் ஓடி வந்து எதிரியின் கையில் வைத்திருந்த அருவாமனையை பிடுங்க சென்றபோது எதிரியானவர் கையில் வைத்திருந்த அருவாமனையை காட்டி இன்னைக்கி நீ தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.07.29 19:03:30 +0530

கொலை மிரட்டல் விடுத்த செய்கையானது ச/பி. 296(b),118(1),351(3) of BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களை பரிசீலனை செய்கையில்,

ii) அரசு தரப்பு வழக்கின்படி குற்ற நிகழ்வு நாள் 27.09.2024 ம் தேதி இரவு 8.45 மணி. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2024 ம் தேதி 20.00 மணி. குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், திசையும்- 6 கி.மீ. ஆதிச்சபுரம் தெற்கு தெரு வாதியின் வீடு அருகில், நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை 03.10.2024 ம் தேதி 2.35 p.m. மணியளவில் பெறப்பட்டுள்ளது. போலிசார் சம்பவயிடத்தை 01.10.2024 ம் தேதியன்று 13.30 மணிக்கு பார்வையிட்டதாக ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

11) **இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில்** " கடந்த 2024 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், ஒருநாள் இரவு சுமார் 09.00 மணியளவில் மின்வெட்டு காரணமாக தனது வீட்டு வாசலில் திவாகர் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தேன் என்றும், அப்போது ஒரு இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு எரியாமல் அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத ஒரு நபர் வேகமாக வந்து தன் மீது மோதிவிட்டார் என்றும், அதில் தனக்கு தலையின் வலது பக்கம் மற்றும் இடது கையில் வெட்டுக்காயம் போல் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றும், பின்னர் அருகிலிருந்த திவாகர் தன்னை மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார் என்றும், தான் சிகிச்சையிலிருந்த போது போலிசார் தன்னிடம் விசாரித்தார்கள் என்றும், தான் வாய்மொழியாக சொன்னேன் என்றும், தன்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றும், தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் அ.சா.ஆ.1 வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும்" என்று கூறி பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.1 தன்னை எதிரி நீ என்னடா தேவடியா பயலே, பெரிய ஆளு மயிரா, குச்சிக்காரி மவனே என்று காமகுரோதமாக திட்டி, கையில் வைத்திருந்த அருவாமனையால் லையில் வலது பக்கம் வெட்டி, தடுத்த போது இடது கையில்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:36 +0530

வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மாறாக அடையாளம் வாகனம் மோதி காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ம் தனக்கு வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12) புகார்தாரரான அசா.1 மற்றும் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டதாகக் கூறி சமரச மனு 22.07.2026 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், அ.சா.1 ம், எதிரியும் மாமனார் மற்றும் மருமகன் என்ற உறவுமுறை கருத்தில் கொள்ளப்படுகிறது.

13) அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 னின் சாட்சியங்களிலிருந்து அ.சா.1 ஐ எதிரி கொச்சை வார்த்தைகளால் திட்டி, எதிரி அருவாமனையால் லையில் வலது பக்கம் வெட்டி, தடுத்த போது இடது கையில் வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் சாட்சியம் அளிக்காத நிலையில் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14) எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட ச/பி. 296(b),118(1),351(3) of BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

15) இறுதியாக, இவ்வழக்கின் எதிரி ச/பி. 296(b),118(1), 351(3) of BNS ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

16) எதிரி பிணைமுறி ஏதேனும் எழுதிக்கொடுத்திருந்தால் மேல்முறியீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

17) இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:42 +0530

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.2, (மு.கூ.பொ)

மன்னார்குடி.

**1.அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண். | சாட்சிகளின் பெயர்கள் | குறிப்பு |
|---|---|---|
| அசா.1 | சுதாகர் | சம்பவத்தில் காயம்பட்ட நபர் பிறழ் சாட்சி |
| அசா.2 | திவாகர் | கண்ணுற்ற நபர் பிறழ் சாட்சி |
| அசா.2 | செல்வநாயகம் (காவல் உதவி ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்த கூடுதல் சாட்சி |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ. எண். | சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம் | தேதி | சான்றாவணம் |
|---|---|---|---|
| அ,சா.ஆ,1 | அ.சா.1 | 27.09.2024 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் |
| அ,சா.ஆ,2 | அ.சா.1 | 22.07.2026 | சமரசமனுவிலுள்ள அ.சா.1 னின் கையொப்பம் |
| அ,சா.ஆ,3 | அ.சா.3 | 01.10.2024 | புகார் மனு |
| அ,சா.ஆ,4 | அ.சா.3 | 01.10.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ,சா.ஆ,5 | அ.சா.3 | 01.10.2024 | பார்வைமகசர் |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:54 +0530

| | | | |
|---|---|---|---|
| அ,சா.ஆ.6 | அ.சா.3 | 01.10.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.3 | 27.09.2024 | விபத்து பதிவேடு |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை.

4. எதிரி தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் : இல்ல

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:03:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.2, (மு.கூ.பொ)

மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.29 19:04:04 +0530